REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: ஐப்பசி 17உ செவ்வாய் (2—11—54) ★ ★ வெளியூர்: ஐப்பசி 18உ புதன் (3—11—54) [இதழ் 121

## கராச்சியில் விமானப் படையினர் இருவர் உள்பட 12 பேர் கைது!

கராச்சி போலீசார் 12 பாகிஸ்தானியர்களைக் கைது செய்துள்ளனர்.

இவர்களில் இரண்டு பேர் பாகிஸ்தான் விமானப் படையைச் சேர்ந்தவர்கள் என்று தெரிகிறது.

கைது செய்யப்பட்டவர்கள், காமன்வெல்த் சர்க்கார் எனப்படும் ஒற்றர் சதிக் கூட்டம் ஒன்றின் உறுப்பினர்கள் என்றும் கூறப்படுகிறது.

# 'சந்தர்ப்பவாதமே காங்கிரசின் தற்கால அரசியல் அடிப்படை'

## 'மைசூர் காங்கிரசில் லஞ்சம் தாண்டவமாடுகிறது'

## 'சட்ட சபையைக் கலைத்து மறு தேர்தலுக்கு ஏற்பாடு செய்வதே பரிகாரம்'

*மக்கள் சபை உறுப்பினர் குருபாதசாமியின் முறையீடு*

"மைசூர் மாநில அரசியல் நிலைகள் மிக வருந்தத்தக்கன வாக, ஏமாற்றம் தருவனவாக மாறிவிட்டிருக்கின்றன; சந்தர்ப்ப வாதமும், ஏதேனும் நொண்டிச்சாக்குகளைக் கூறி தப்பித்துக் கொள்ளும் பழக்கமும் காங்கிரஸ் அரசியலின் அடிப்படைக ளாகிவிட்டன;

"முதன் மந்திரி அனுமந்தய்யாமீது எதிர்க் கட்சியினர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதோ அன்றி முதன் மந்திரி சட்டசபையில் தம்மீது நம்பிக்கை தெரிவிக்கு மாறு கோருவதோ உபயோகமானவையல்ல; மைசூர் ராஜப் பிரமுகர், உடனடியாக மறு பொதுத் தேர்தல்களை நடத்த உத் திரவிட வேண்டும்; அதுதான் சரியானது,"

*—என்று, பி.-சோ. கட்சியைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினரான எஸ். குருபாதசாமி பத்திரிகை நிருபர்களிடை குறிப்பிட்டிருக்கிறார்.*

*மேலும் அவர் கூறியதாவது:— "மைசூர் ஆளும் கட்சி பிளவு பட்டுக் கிடக்கிறது. பெப்சு மா நிலத்தில் நிலவுகிற அவல நிலை இந்த மாநிலத்திலும் நிலவுகிறது. ஆளும் கட்சியினரிடை உள்ள கருத்து வேறுபாடு மக்களுக்குப் பெரும் தீமை பயப்பதாகும்.*

மைசூர் காங்கிரஸ் வகுப்பு வாதிகள் நிறைந்ததாயும், லஞ்சம் தாண்டவமாடுவதா யும் ஆகிவிட்டிருக்கிறது.

நாட்டிலே, ஜனநாயகம் நன்கு வளர பலமான ஒரு எதிர்க் கட்சி இன்றியமையா தது என்று எல்லோரும் கூறு கின்றனர்; ஆனல், ஆட்சியி லுள்ள காங்கிரசாரோ, எதிர்க் கட்சியினரை ஒழிக்க தங்கள் சக்தி அத்தனையையும் பயன்படுத்துகின்றனர்.

உதாரணம் சொல்லவேண்டு மானல், மைசூர் மந்திரி ஒரு வர், எதிர்க் கட்சியிலிருந்த அரிஜன அங்கத்தினர் ஒரு வருக்கு, தனது நலம் கருதி யும், தனது அரிசன சமூக நலன் கருதியும் அவர் காங் கிரசில் சேர்ந்து விடுவது நலம் எனக் கூறி கடிதம் எழுதியிருக்கிறார். அவருக்குக் காட்டப்பட்ட ஆசைகள், அந்த அரிசன உறுப்பினரை காங்கிரசில் சேருமாறு தூண்டியிருக்கின்றன; இது ஜனநாயக வளர்ச்சிக்கு உகந்ததாகுமா?"

## 127 மணி நேரம் தொடர்ந்து பேசியவர்

*புதிய உலக ரிகார்டை ஏற்படுத்தினர்!*

*கெவின்ஷீவின் என்பவர் இடை விடாது ஐந்து நாட்கள் பேசிக் கொண்டே இருந்து புதிய உலக ரிகார்டு ஏற்படுத்தியுள்ளார். 127 - மணி நேரம் தொடர்ந்து பேசிய அவர் மயக்கமடைந்தார்.*

*லங்காஷயரில் உள்ள ஒரு நடன அரங்கில் இவர் தொடர்ந்து பேசிக்கொண்டே இருந்தார்.*

*பேசிக்கொண்டே இருந்த அந்த நேரத்தில், சுமார் 100 சிகரெட் பிடித்திருக்கிறார். களைப்பு மிகுதி யினல் மயக்கமுற்று பின் தெளிந்த அவரது கண்கள் சிவப்பேறியிருந் தன. பேசிக்கொண்டே யிருந்த காலத்தில் அவர் சூடான பானங் களையே அருந்தினர்.*

*இதற்கு முன் ரஷ்யாவில்தான் தொடர்ந்து '36' மணி நேரம் பேசிய 'ரிகார்டு' இருந்தது.*

### உங்கள் குறிப்புக்கு

*1954 மார்ச் மாதம் வரை இந்தி யாவில் மொத்தம் 98, 256 பஞ்சா யத்துகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன; திட்ட கால ஆரம்பத்தில் சுமார் 83,093 பஞ்சாயத்துகள் இருந்தன:*

## 'இலங்கையில் இந்தியத் தூதுவராக தெ. இந்தியரை நியமிக்க வேண்டும்'

## 'திரு-கொச்சி துப்பாக்கிப் பிரயோக ஆய்வுக் குழுவைத் திருத்தி அமைக்கவும்'

*தமிழ்நாடு ம. சோ. கட்சி செயற் குழு கோரிக்கை*

**சிதம்பரம், அக். 31—**

**"இலங்கையில் இந்தியத் தூதுவராக உள்ள சி. சி. தேசாய் அவர்களின் பதவி மாற்றத்திற்குப் பிறகு, தென்னட்டினர் ஒரு வரையாவது அல்லது முதிர்ந்த அனுபவமுடைய ஒரு சென்னை சர்க்கார் அதிகாரியையாவது அப்பதவியில் நியமிக்க இந்தியப் பேரரசு முன்வர வேண்டும்,"**

**"திரு-கொச்சியில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத் தைக் குறித்து ஆராய, மலையாளி, தமிழர் அல்லாத ஒரு நீதி பதியை, திரு-கொச்சி சர்க்கார் நியமிக்காதது வருந்தத்தக்கது."**

*தமிழ்நாடு ம. சோ. கட்சியின் செயற் குழு கூட்டத்தில் மேற் குறிப்பிட்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டுள்ளன.*

*திரு-கொச்சி சர்க்கார் விசாரணை ஏற்பாட்டைக் குறித்து மேலும் அக்குழு, ம. சோ. கட்சியின் தேசிய வர்வாகக் குழு குறுக்கிட்டு திரு வாங்கூரைச் சேராத இரு நீதிபதி களை விசாரணை அமைப்பில் சேர்த் துக்கொள்ள முயற்சிக்க வேண்டு மெனவும் தீர்மானித்திருக்கிறது.*

*பி. எஸ். சின்னதுரை மேற்படி செயற் குழு கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.*

## டில்லி நகரசபைத் தேர்தல்

### கட்சிகள் நிலவரம்

***டில்லி நகரசபைக்கு நடை பெற்ற தேர்தலில் காங்கிரஸ் 25 இடங்களைப் பிடித்துள்ளது. 52 இடங்களுக்கு காங்கிரஸ் போட்டி யிட்டது.***

***ஜன்சங்க் 16, கம்யூனிஸ்டுகள் 2, சோஷியலிஸ்டுகள் 2, சுயேச்சை கள் 8 ஆக வெற்றி பெற்றுள்ளனர்.***

***53 இடங்களையுடைய நகர சபைக்கு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் சார்பில் 52, ஜன சங்க் 25, சோஷியலிஸ்டுகள் 7, இந்து மகா சபா 4, கம்யூனிஸ்டு 6, சுயேச்சைகள் 58 ஆகமொத்தம் 152 பேர் போட்டியிட்டனர்.***

***இதற்கு முன் காங்கிரஸ், 3 பொது தொகுதிகள், ஒரு மில் முதலாளிகளுக்கான தொகுதி, ஒரு வர்த்தகத் தொகுதி இவற்றிலும் வெற்றி பெற்றது. கம்யூனிஸ்டு கள் இரண்டு தொழிலாளர் தொகுதிகளில் வெற்றி பெற்றனர்.***

***ஆக, 61 இடங்களில் காங்கிரஸ் 31, எதிர்க்கட்சியினர்—சுயேச்சை கள் உட்பட—எல்லாக் கட்சியின ருமாகச் சேர்ந்து 30 இடங்களைப் பெற்றுள்ளனர்.***

# புதிய நிலை!-உடனடி பலன்?

★

## புதுவையில் டெல்லி ஆதிக்கம்; அரசியல் கைதிகளுக்கு விமோசனம்; நாடு கடத்தப்பட்டவர்கள் நுழைவு; பிரெஞ்சு அதிகாரிகள் வெளியேற்றம்!

*பிரெஞ்சிந்தியா, இந்தியக் குடியரசின் நேரடி ஆட்சிக்குக் கொண்டுவரப்பட்டு விட்டது. அதன் விளக்கத்தைப் புதிய கமிஷனராகப் பதவியேற்றுள்ள கேவல் சிங் தந்துள்ளார். விவரம் கீழே தரப்படுகிறது:—*

"விடுதலை பெற்றுள்ள இந்தப் பகுதிகளின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டிருக்கிற இந்திய அரசாங்கம் சில பல நடவடிக்கை களை மேற்கொள்ள விருக்கிறது; இந்தப் பகுதிகளின் நிர்வாகத் தலைவராக இன்று முதல் ஒரு பிரதம கமிஷனர் இருப்பார்; பிரெஞ்சு கமிஷனருக்கு இருந்த எல்லா அதிகாரமும் இந்திய பிரதம கமிஷன ருக்கும் இருக்கும்; ஆனல் இந்தியக் கமிஷனர், இந்திய அரசாங் கத்திற்கு நேரடியாகக் கட்டுப்பட்டவரா யிருப்பார்."

★

*பிரெஞ்சிந்திய சிறைகளில் வாடிக்கிடந்த அரசியல் கைதிகள் அனைவருக்கும், அதிகார மாற்றத் தின் அறிகுறியாக விடுதலை கிடைத்திருக்கிறது. இந்தியப் பேரரசின் வெளிநாட்டுத் துணைச் செயலாளரான ஆர். கே. நேரு, இத்தகவலை, புதுவையில் காலை யில் நடைபெற்றப் பொதுக் கூட்டம் ஒன்றில் வெளியிட்டார்.*

*இப்பகுதிகள் ஐந்தாண்டு திட் டத்தின் கீழ் கொண்டுவரப்படும் எனவும், இந்திய அரசியல் சட்டத்தில் வழங்கப்பட் டுள்ள அடிப்படை உரிமைகளை இப்பகுதியிலும் அமுல் நடத்த*

(4-ம் பக்கம் பார்க்க)

## நீக்ரோக்கள் தனிப்பிரிவு மறைகிறது!

## அமெரிக்க இராணுவத்தில் சீர்திருத்தம்

அமெரிக்க இராணுவத்தில் உள்ள நீக்ரோ தனி 'யூனி'ட்டு கள் எல்லாம் நீக்கப்பட்டுவிட்டனவாம்! இராணுவத்தை கூட்டாக அமைப்பது பற்றிய ஏற்பாடுகள் மிகவும் சுமுகமாக நடை பெற்றனவாம்!

இராணுவத்தில் செய்யப்படும் இந்த ஏற்பாடுகளால், திறமை உயர்வு, மனித சக்தியில் சிக்கனம், பணம், பொருள்கள் ஆகியவை களில் சிக்கனம் ஏற்பட்டன என்று தெரிகிறது.

*நீக்ரோக்களுக்கென இராணுவத் தில் தனிப் பிரிவு உள்ளதை நீக்கி, இராணுவத்தில் ஒருமைப்பாட்டை உருவாக்கும் முயற்சி சென்ற ஆண் டில் அமெரிக்கக் கடற்படையில் தனி நீக்ரோ பிரிவுகள் நீக்கப் பட்டபோது ஆரம்பமாகியது.*

*இப்போது கடற்படைக்கான பயிற்சிகளில் அனைவருக்கும் சம சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுகின்றன*

## டாக்டர் பதேமி தூக்கிலிடப்படுவார்

## அப்பீல் செய்ய அனுமதி இல்லை

*மன்னர் ரீசா சிலைமுன் தண்டனை நிறைவேற்றப்படும்*

**தெஹ்ரான், நவ. 2—**

பாரசீக முன்னாள் அமைச்சர் டாக்டர் பதேமிக்கு, இராணுவ நீதி மன்றம் அளித்திருந்த மரண தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்துகொள்ள மன்னர் ஷா அனுமதி அளிக்கவில்லை என்று தெரிகிறது. ஆகவே, அவர், இன்றே, நாளையோ அல்லது புத னன்றே தூக்கிலிடப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தெஹ்ரான் நகரின் நடுவேயுள்ள ஷா ரீசா பஹ்லவி சிலையின் முன்னிலையில், அவர் தூக்கிலிடப்படலாம் என்று தெரிகிறது. இப் பகுதியில்தான், 1953-ல், தேசிய முன்னணியினரும், டூடே கட்சி யினரும் கலவரம் செய்தனர்.

*தூக்கிலிடப்பட இருக்கும் டாக் டர் பதேமி, முன்னாள் பிரதமர் முசாதிக்கின் மந்திரி சபையில் அமைச்சராக இருந்தார். மன்னர் ஷா பாக்தாத் நகர் சென்றிருந்த போது, ஷாவை பதவியிலிருந்து நீக்கவேண்டுமென்று பதேமி கிளர்ச்சி செய்ததுடன், பாக்தாத் செல்லும் வழியில் உள்ள ஈரான் தூதுவர்களுக்கு ஷாவை அலட்சி யம் செய்யுமாறு தந்தியும் அனுப்பி னர் என்று கூறப்படுகிறது.*

*தண்டனையை முன்பே [illegible] உயர்நீதி மன்றம் உறுதி செய்[illegible]*

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 2—11—1954 செவ்வாய்


# தாங்களே வழிகாட்டினர்!

மலையாள மொழிக்குப் புறம்பான, தமிழ்-கன்னட மொழி வழங்கும் பகுதிகளை உள்ளடக்கிய ஒரு கேரள மாநிலம் வேண்டுமென்று, திரு-கொச்சி தேசீயக் காங்கிரஸ், ஒரு கோரிக்கையை, மாநில திருத்தக் குழுவிடம் கொடுத்திருக்கிறது. நாஞ்சில் தமிழ்ப் பகுதிகளையும் விட்டுக் கொடுக்க முடியாது எனவும், அக்கோரிக்கையில் அக்காங்கிரஸ் குறிப்பிட்டிருக்கிறது.

திரு-கொச்சி காங்கிரஸ் கோரிக்கை அசாத்தியமானது, அது கண்டிக்கத்தக்கது, அதை ஒப்புக்கொள்ளக்கூடாது என ஏற்கெனவே, நாம், நமது கருத்தை விளக்கியும் கூறி இருக்கிறோம். அதே நேரத்தில், திரு-கொச்சியை, இவ்வாறு ஒரு கேரள மாநிலத்தைக் கேட்குமாறு திரை மறைவில் தூண்டிவிட்டதும் அகில இந்திய காங்கிரசும், இந்தியப் பேரரசுந்தான் எனவும் நாம் சுட்டிக்காட்டி இருக்கிறோம். இப்படி ஒரு கேரள மாநிலம் உருவாக்கப்படும் என இந்தியப் பேரரசு கொடுத்த வாக்குறுதியின் மீதுதான், திரு-கொச்சி இணைக்கப்பட்டு, ஒரு கூட்டாட்சி நடைமுறைக்கு வர கேரள காங்கிரஸ் இணங்கியது என, கேரள காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் காணப்படும் உண்மையையும் எடுத்துக் காட்டி இருந்தோம்.

புதிதாகக் காண விழையும் கேரள மாநிலம் நாஞ்சில் தமிழ் பகுதிகளை இழந்துவிட இணங்காது என்னும் கேரள காங்கிரசின் கூற்றைக் கண்டதும், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் கண்டித்தார். அவர் கண்டிப்பதில் நியாயமிருந்தபோதிலும், நாஞ்சில் தமிழ் பகுதிகளை விட முடியாது என்ற அளவுக்குப் பிடிவாதம் பேசும துணிவை, கேரள காங்கிரசிடம் உண்டாக்கிய இந்தியப் பேரரசையும், அகில இந்திய காங்கிரசையும், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் முதல் முதலாகக் கண்டிக்க முன்வர வேண்டும் எனவும் நாம் கூறி இருந்தோம். அதுவுமின்றி, பிறமொழி வழங்கும் பகுதிகளை உள்ளடக்கிய ஒரு கேரள மாநிலம் அமைப்பதற்கான ஒரு அறநெறி மரபை சென்னை காங்கிரஸ் அரசியலாரே, தங்கள் செயலால் ஆக்கி இருக்கும்பொழுது, அந்த அறநெறி மரபைப் பின்பற்றி, பிறமொழி வழங்கும் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்த கேரள காங்கிரஸ் ஆசை கொள்வதில் ஆச்சரியமென்ன இருக்கிறது? அந்த ஆசையைக் கண்டு ஆத்திரப்படவும், கண்டிக்கவும் தமிழ்நாடு காங்கிரசிற்கு வாயேது? எனவும் நாம் முன்னர் கேட்டிருந்தோம். நிற்க,

சென்ற மே திங்கள் முதல் கிழமையில், சென்னை சட்டசபையில், 'சென்னை மாநிலத்தில் உள்ள மலையாளம் பேசும் பகுதிகளை திரு-கொச்சியோடு 1954 அக்டோபர் முதல் தேதிக்குள் இணைக்க வேண்டுமென குடியரசுத் தலைவருக்கு சிபாரிசு செய்யுமாறு, சென்னை அரசியலாருக்குச் சட்டசபை சிபாரிசு செய்கிறது,' என்று ஒரு தீர்மானத்தை பொதுவுடைமை கட்சியினர் ஒருவர் கொண்டுவந்தார்.

'இதுதான் அசல் தீர்மானம்; இதற்கு, இரண்டு திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.'

'திருவாங்கூர் - கொச்சியில் உள்ள தமிழ்ப் பகுதிகளை சென்னை மாநிலத்தோடு இணைத்துவிட வேண்டுமென்பது ஒரு திருத்தமாகும். பிரெஞ்சிந்தியப் பகுதிகளான புதுவை, காரைக்காலை, சென்னை மாநிலத்தோடும், மாகியை திரு-கொச்சியோடும் இணைக்க முயல வேண்டும் என்பது இரண்டாவது திருத்தம்.'

இரண்டு திருத்தங்களையும் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் ஒப்புக்கொண்டார். ஆனால், சென்னை மாநிலத்தில் உள்ள மலையாளப் பகுதியை திரு-கொச்சியோடு இணைத்துவிட வேண்டும் என்ற மூல தீர்மானத்தை அமைச்சர் ஒப்புக் கொள்ள மறுத்துவிட்டார்.

அமைச்சர் குழுவின் இப்போக்குக் குறித்து விரிவாக, நாம், அப்பொழுதே எழுதி இருந்தோம். சென்னை அமைச்சர் குழுவின் பொருந்தாப் போக்கை ஒரு ஆதாரமாக வைத்துக் கொண்டு, நாஞ்சில் தமிழ் பகுதிகளை விட்டுக் கொடுக்க திரு-கொச்சி மறுப்புக் கூறினாலும் கூறும் என நாம் அப்பொழுதே அச்சம் தெரிவித்திருந்தோம். நமது அச்சம், கேரள காங்கிரசின் நடைமுறையால் நிறைவேறி விட்டது.

அப்பொழுது நாம் எழுதியது:—

"திருவாங்கூர் தமிழ்ப் பகுதியினர், சென்னை மாநிலத்திலுள்ள தமிழ்ப் பகுதியோடு இணைய வேண்டுமெனத் துடியாய்த் துடிக்கிறார்கள். அண்மையில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தல், இதை உறுதிப்படுத்தியும் இருக்கிறது. நாஞ்சில் தமிழர்களின் இந்நியாயமான கோரிக்கையை, திரு—கொச்சி சர்க்கார் ஒப்புக் கொள்ள மறுக்கிறது அல்லது காலங் கடத்துகிறது."

"கனம் சுப்பிரமணியத்தின் கூற்று, நாஞ்சில் தமிழர்களின் கோரிக்கையை நிரந்தரமாக மறுப்பதற்கு நல்லதோர் ஆயுதமாக அமைந்து போய் இருக்கிறது. அதாவது, மலபார் பகுதி மலையாளிகளைக் கொண்டுள்ள சென்னை மாநிலத்தோடு சேரத் துடிக்கிற நாஞ்சில் தமிழர்கள், அதே மலையாள மொழி பேசும் தங்களுடன் இணைந்திருப்பதில் தவறு என்ன என்று திரு—கொச்சி மலையாளிகள் கேட்கக் கிளம்பினால், அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இப்பொழுதாவது மலையாள மொழி பேசும் ஒரு மொழியினரோடு மட்டுமே சேர்ந்திருக்கிறீர்கள். சென்னை மாநிலத்தோடு சேர்ந்தால், மலையாள மொழியினருடனும், கன்னட மொழியினருடனுமல்லவா நாஞ்சில் தமிழர்கள் சேர்ந்திருக்க வேண்டும் என் திரு—கொச்சி மலையாள மொழியினர் கேட்டால், அதற்கு எப்பதிலை நாஞ்சில் தமிழர்கள் கூறுவர்?"

"சென்னை மாநிலத்தை, மொழி அடிப்படையில் திருத்தியமைத்து, தமிழ் நாடு என்ற பெயரிட்டு, நாஞ்சில் தமிழ்ப் பகுதிகளையும் ஒன்று சேர்க்க முற்படுவது தான், 'கன'த்துக்கு அழகு. அதை விட்டுவிட்டு, மலையாளப் பகுதிகளை திரு-கொச்சியோடு ஒன்றாக இணைக்கும் தீர்மானத்தை ஆதரிக்க மறுத்து, தமிழர் பகுதிகளை மட்டும் ஒன்றாக இணைக்கும் திருத்தத்தை ஆதரிப்பது கேலிக் கூத்தாகும். அதே நேரத்தில், மலையாள மொழி வழங்கும் மாகியை திரு—கொச்சியோடு சேர்க்க வேண்டுமென்பதை ஒப்புக் கொண்ட 'கனம்' சென்னை மாநிலத்திலுள்ள மலையாள மொழி வழங்கும் ஒரு மாவட்டத்தை திரு—கொச்சியோடு இணைக்கவேண்டுமென்ற அசல் தீர்மானத்தை ஒப்ப மறுத்ததும் நகைப்புக்கிடமானதாகும்."

அறமோ, மரமோ எதுவாக இருந்தாலும், அகில இந்தியக் காங்கிரசின் கட்டளைக்குக் கண்ணை மூடிக் கொண்டு கீழ்ப்படிய வேண்டும் என்ற அரசியல் இழிகுணம்தான், சென்னை மாநில அரசியலாருக்கு தங்களுக்கு நியாயமெனப்படும் கொள்கையில் நிலைத்து நிற்கும் நெஞ்சுரத்தைக் கொடுக்க மறுக்கிறது. நாஞ்சில் தமிழ்ப் பகுதியையும், புதுவை, காரைக்காலையும் சென்னை மாநிலத்தோடும், மாகியை திரு-கொச்சியோடும் சேர்க்க வேண்டும் என வலியுறுத்தும் சென்னை அரசியலார், சென்னை மாநிலத்தில் உள்ள மலையாள மொழி வழங்கும் பகுதியை திரு-கொச்சியோடு இணைத்துவிட வேண்டுமென வலியுறுத்த மறுப்பது, சென்னை அரசியலாரிடம் காணப்பெறும் அறநெறி குழப்பமேயாகும்.

மொழிவழி மாநில ஏற்பாடு தான் சென்னை அரசியலாரின் உள்ளக்கிடக்கை. இருந்தாலும் அகில இந்தியக் காங்கிரசின் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற நினைப்பினால், நியாயமான மொழிவழி மாநில கோரிக்கையை உதறித்தள்ளுகிறார்கள்.

அது குறித்து அப்பொழுது கூறியது:—

**"அமைச்சரின் குழப்பத்திற்கு வேறு காரணம் இருக்கிறது. அதாவது, மொழிவழி மாநில ஏற்பாட்டை, காங்கிரஸ் கட்சியினர், மற்றக் கட்சிகளுடன் சேர்ந்து கொண்டு வலியுறுத்தக் கூடாது என்ற அகில இந்தியக் காங்கிரசின் கட்டளைக்கு இணங்கி நடக்க வேண்டுமென்பதுதான் 'கனத்'தின் விருப்பம். ஆனால், அக்கட்டளை நியாயமானது என்பதிலும் 'கனத்'திற்கு நம்பிக்கையில்லை; அதை வெளிப்படையாக மீறவும் அவருக்கு நெஞ்சுரம் இல்லை."**

இப்பொழுது இதன் விளைவு என்னயிற்று? நாஞ்சில் தமிழ் பகுதிகளைவிட்டுவிட முடியாது என இறுமாப்புடன் கூறுவதோடு, வேறு தமிழ்ப் பகுதிகளையும் தமதாக்கிக் கொள்ள திரு-கொச்சி காங்கிரஸ் முன் வந்திருக்கிறது!

சென்னை மாநிலத்திலிருந்து மலையாள மாவட்டத்தைப் பிரித்து திரு-கொச்சியோடு இணைத்துவிட வேண்டுமென்ற மூல தீர்மானத்தை சென்னை சட்டசபையில் காங்கிரஸ் அமைச்சர் குழு, ஒப்புக் கொண்டு நிறைவேற்றி இருக்க வேண்டும். அவ்வாறு செய்திருந்தால், தமிழ், கன்னட மொழி வழங்கும் பகுதிகளை உள்ளடக்கிய ஒரு கேரள மாநிலம் தேவை எனும் அசாத்திய கோரிக்கையைக் கேட்க, திரு-கொச்சி காங்கிரசிற்குத் துணிவு பிறந்திருக்காது! இனி சென்னை போக்கை முன்மாதிரியாகக் காட்டி, தனது கட்சியை நிலைநாட்டிக்கொள்ள திரு-கொச்சி முன்வந்தாலும், அதில் ஆச்சரியமொன்றுமில்லை.

## பட்டம் தாணுவிற்கு...

### சொந்தக் கட்சி தரும் சூடு!

"கொச்சிக்காரர்கள் விஷயத்தில் பட்டம் மந்திரிசபை தொடர்ச்சியாக அநீதி இழைத்து வருகிறது; இதை எடுத்துக் காட்டியும்கூட இன்னும் நிவாரணம் கிடைத்தபாடில்லை; எனவே, இவ்விஷயத்தில் மத்திய நிர்வாகக் குழுவாவது தலையிட்டு, மந்திரி சபையின் தவறான போக்கைத் திருத்த வேண்டும்.

"கொச்சிக்காரர்களுடன், பட்டம் மந்திரி சபை கையாண்டுவரும் கொள்கைகளால், இங்குள்ள காங்கிரஸ்காரர்களும், கம்யூனிஸ்டுகளும் நன்றாக முதலெடுக்கிறார்கள்."

இவ்வாறு, கொச்சியின் நலன்களைப் புறக்கணித்துக் கொண்டும், கொச்சிப் பிரதேசத்திலுள்ள சர்க்கார் ஊழியர்களின் 'சர்வீஸ்' இணைப்புக் காரியங்களில் அநீதி இழைத்துக் கொண்டும் வருகிற பட்டம் தாணு சர்க்காரின் நடவடிக்கைகளை எடுத்துக் காட்டி, திருச்சூர் மாவட்ட பிரஜா சோஷலிஸ்டு கட்சி நிர்வாகக்குழு, மத்திய பி. சோ. நிர்வாகக் குழுவிற்கு ஒரு மகஜர் அனுப்பியுள்ளது.

## காமன்வெல்த் மாநாடு

### 'கெடுபிடி' போரை ஒழித்துக் கட்டும்?

வருகிற ஜனவரி அல்லது பிப்ரவரி திங்களில் லண்டனில், காமன்வெல்த் மாநாடொன்று நடைபெறலாம் என்றும், அந்த மாநாட்டில் 'கெடுபிடி'யான போரை ஒழித்து, இரண்டு வல்லரசுக் கோஷ்டிகளும் சமாதானமடைந்து ஒத்து வாழ்வதற்கான திட்டங்களும், ஸ்டர்லிங் நாணயமாற்றுக் கட்டுப்பாடுகளை நீக்குவது பற்றியும் ஆகிய பொருளாதார, அயல் நாட்டுப் பிரச்சினைகள் பரிசீலிக்கப்பட்டு முடிவு காணப்படும் என்றும் தெரிகிறது.

இந்த மாநாட்டில் காமன்வெல்த் நாடுகளின் பிரதமர்கள், நிதி மந்திரிகள் அயல் நாட்டு அமைச்சர்கள் ஆகியோர் கலந்து கொள்ளுவார்களாம். மேலும், இந்த மாநாடு நடைபெறுவதற்கு முன்கூட்டியே, ஐசன்ஹவர், சர்ச்சில், மெண்டஸ் பிரான்ஸ், மேற்கு ஜெர்மன் பிரதமர் அடினார் ஆகியோர் கூடிப்பேசி, ரஷ்யாவுடன் சமரச மனப்பாங்கை உண்டுபண்ண யோசிப்பார்களென்றும் தெரிய வருகிறது.

## துருக்கி குடியரசு நிறுவன 31-ம் ஆண்டு விழா

### சோவியத் சுபச்செய்தி

துருக்கிய நாட்டின் 31-வது குடியரசு நிறுவன விழாவின் போது வாழ்த்துத் தெரிவித்த சோவியத் ரஷியா, தான், துருக்கியுடன் வர்த்தக, கலாச்சார, தொழில் நுணுக்க உறவுகளை மேற்கொள்ளத் தயாராயிருப்பதாக கூறியிருக்கிறதென மாஸ்கோ ரேடியோ செய்தி வெளியிட்டுள்ளது.

இங்குள்ள செய்தித் தாள்கள் எல்லாம், தலைப்புச் செய்தியாக, ரஷியாவின் வாழ்த்துக்களைப் பிரசுரித்து வரவேற்றனவாம்.

அந்த வாழ்த்துச் செய்தியில், கடந்த 31 ஆண்டுகளில் துருக்கியின் சாதனைகள் மகத்தானவையென்றும், எதிர்கால முன்னேற்றத்திற்கு சமாதானம் மிக அத்தியாவசியமானதென்றும் சோவியத் குறிப்பிட்டிருந்ததாம்.

'சமீப, மத்திய கிழக்குப் பகுதிகளில் சமாதானம் நிலவ துருக்கி - ரஷிய தோழமை இன்றியமையாததாகும்," என்றும் மாஸ்கோ ரேடியோ அறிவித்திருக்கிறது.

## பீகாரிலும் மதுவிலக்கு!

பீகார் மாநில அரசாங்கம், மாநிலத்தில் உள்ள ஏழு மாவட்டங்களில் மதுவிலக்கு செய்ய உத்தேசித்துள்ளதாம். பாட்னா, கயா, ஷகாரிபாக், மாங்கீர், தர்பங்கா, சாம்பரான் ஆகிய மாவட்டங்களில் 'கள்' விற்பதும் இறக்குவதும் தடுக்கப்படும் என்று தெரிகிறது.

## அபிவிருத்தித் திட்டங்கள்

### சொந்தப் பணம் செலவிட நிபந்தனை

மரணவரி விதிப்பினின்றும் தங்கட்கு விலக்களித்தால், அபிவிருத்தித் திட்டங்களுக்கு தங்கள் சொந்தப்பணத்தைச் செலவிடச் சித்தமாயிருப்பதை பண்டிதரிடம் எடுத்துக் கூறுவது பற்றி சௌராஷ்டிரத்தின் முன்னாளைய மன்னர்கள் யோசித்து வருகின்றனராம்.

## 'தொடர்பு துண்டிக்கப்படுகிறது'

சாமர்சட் இல்லத்தில் வசிக்கும் கலைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் யாருடனும் டெலிபோன் மூலம் பேச முடியாதவாறு டெலிபோன் தொடர்பு துண்டிக்கப்பட்டிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

## பர்மியப் பிரதமர் சீனு செல்கிறார்

பர்மியப் பிரதம மந்திரி யூ-நு, நவம்பர் இறுதியில் சீனாவுக்குப் பயணமாவார் எனத் தெரிகிறது.

சீனாவில் அவர் இரண்டு வார காலம் சுற்றுப்பயணம் நடத்துவார்.

சீனா செல்லும் வழியில் அவர் ஹானோயில் இறங்கி டாக்டர் ஹோ-சி-மின்னையும் சந்திப்பார்.

சீனாவுக்கு வருகை தருமாறு பர்மியப் பிரதமரை, சீனப் பிரதமரான சௌ-என்-லாய் சென்ற ஜூன் மாதத்தில் பர்மா சென்றிருந்தபோது அழைத்திருந்தார் எனத் தெரிகிறது.

## தேயிலை ஏற்றுமதி உயர்கிறது!

### இந்திய சர்க்கார் அறிவிப்பு

"இந்திய சர்க்கார் இந்த ஆண்டில் தேயிலை ஏற்றுமதியை 41,79,00,000 பவுண்டுகளிலிருந்து 44,92,30,000 பவுண்டுகளாக உயர்த்தியுள்ளது," என்று இந்திய சர்க்காரின் வியாபார அமைச்சராலய பத்திரிகைக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

# 'நண்பரே வருக! உமது வெளிநாட்டுக் கொள்கை ஒழிக!'

## தெற்கு வியட்நாம், நேருவுக்கு அளித்த அதிசய வரவேற்பு

தெற்கு வியட்நாம் பிரதமருடன் கலந்து பேச இந்தியப் பிரதமர் நேரு சைகோன் சென்றபோது, "நண்பரே வருக; ஒழிக, உமது ஒன்றிவாழும் கோள்கை," என்ற முறையில் மக்கள் வரவேற்றனர் என்று தெரிகிறது.

தெற்கு வியட்நாம் பிரதமர் கோ-தின்-தியம் என்பவருடன் கலந்து பேச அழைப்பின் பேரில் சைகோன் சென்ற பண்டித நேரு, சைகோன் விமான நிலையத்தில் இறங்கியதும், அவர் எதிரே அவரது வெளிநாட்டுக் கொள்கையைக் கண்டிக்கும் துண்டுப் பிரசுரங்கள் வைக்கப்பட்டன என்று தெரிகிறது.

"கம்யூனிஸ்டுகளுடன் சமரசம் என்ற பேச்சே கூடாது; கம்யூனிஸ்டுகளின் சர்வாதிகாரத்தின் கிழ் 'வியட்நாம் மக்கள் பட்ட துயரம், 'கம்யூனிசம் என்றுல் என்ன?' வென்று தெளிவாகத் தெரிந்துவிட்டது; இப்போதைய சூழ்நிலையில் நாங்கள் கம்யூனிசத்துடன் செய்துகொள்ளும் எந்தச் சமரசத்தையும் எதிர்க்கிறோம்."

என்று, அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் விமான நிலயத்தில் கொடுக்கப்பட்டன.

இந்த துண்டுப் பிரசுரத்தில் வியட்நாம் தேசியச் சேனையின் தளபதி ஜெனரல் வான்-ஹின், மூன்று முப்பெரும் இராணுவங்களின் தளபதிகள் ஆகியோர் கையெழுத்திட்டிருக்கின்றனர்.

இந்திய மக்களின் சுதந்திரத்திற்கு பாடுபட்ட 'தலைவர்' என்ற முறையில் நேருவைத் தாங்கள் மதிப்பதாகவும், இந்தியாவின் நட்பு தேவை என்றும், அப்பிரசுரத்தில் மேலும் கூறப்பட்டிருந்ததாம்.

அமைதி பாதுகாப்புக் கழகம் என்ற இடதுசாரி இயக்கமொன்று வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில் "பண்டித நேரு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நன்மைக்காக உழைக்கிறார்," என்று அச்சடிக்கப்பட்டிருந்ததாம்.

விமான நிலயத்திலிருந்து பண்டித நேரு தங்கியிருந்த மாளிகை வரையில் உள்ள சாலையில் நேருவின் வெளிநாட்டுக் கொள்கையை இழித்துரைக்கும் வாக்கியங்கள் கொண்ட வளைவுகள் ஏராளமாகக் காட்சியளித்தனவாம்.

நேரு தங்கியிருந்த மாளிகைக்கு எதிரே வளைவு ஒன்றில், 'இந்தியப் பிரதமரே வருக; உமது ஒன்றி வாழும் கொள்கை ஒழிக,' என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்ததாம்.

வியட்நாம் பிரதமர், நேருவுக்கு அளித்த விருந்தில், வியட்நாம் இராணுவத் தளபதி ஜெனரல் ஹின், மூன்று தனிப்பட்ட வியட்நாம் இராணுவத்தின் தலைவர்கள் உள்பட பல அமைச்சர்கள், பிரெஞ்சுத் தூதுவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பாதை ஓரத்தில்...

## பழங்கால தானியக் குழி!

ஓமலூர், அக். 30—

இவ்வூர் ஊராண்மைக் கழக பாதை ஓரத்தில் போலீஸ் நிலயத்திற்கு எதிராக் ஒரு ஆழமான குழி வெடிப்பு உண்டாகியுள்ளதாம்.

கடந்த சில நாட்களாகப் பெய்த மழையினுல் பாதை வெகுவாக சீர்கெட்டுப் போயிருந்ததினுலும், இந்தப் பாதையில் பாரம் மிகுந்த லாரிகள் சென்று வருவதினுலும், இந்தக் குழி ஏற்பட்டிருக்கலாமெனவும் கூறப்படுகிறது.

இக்குழியைப் பார்த்த கிராமவாசிகள் சில, பழைய காலத்தில் உணவுத் தானியங்கள் கொட்டி வைக்கும் குழிபோல இது இருக்கிறது என்றும் கூறுகின்றனர்.

குழி, சுமார் 5 அடி சுற்றளவில் 10 அடி ஆழமிருக்கலாம் என்றும், மேற்புறம் வட்டவடிவமாயும், உட்புறம், சற்று அகலமாக இருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

# பகுத்தறிவு சோதனைக்கு உள்பட முடியாத மதம் அழியட்டும்!

## நிகிலானந்தரின் கருத்து!

"பகுத்தறிவின் சோதனைகளுக்கும், விஞ்ஞான நிலைவுகளுக்கும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியாத மதம் அழிந்து போகட்டும்; ஆனுல், மதம் என்றுமே அழியாது என்று நான் கருதுகிறேன்,"

என்று நியூயார்க்கிலுள்ள இராமகிருஷ்ண மடத்தின் தலைவர் நிகிலானந்தா என்பவர், மதுரை கொக்கிகுளத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"அமெரிக்காவிற்குச் செல்லும் இந்தியர்கள் அமெரிக்கர்களின் பெருவாழ்வு கண்டு பூரித்துப் போகிருர்கள்; அதுபோன்ற வாழ்வு தங்கள் நாட்டிற்கும் தேவை என்று கருதுகிறுர்கள்; ஆனுல், அமெரிக்கர்களது வெறும் உலக வாழ்வு நமக்கு விரும்பத் தகாதது,"

என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

'இந்தியா, மதச் சார்பற்ற நாடு,' என்று பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது வருந்தத் தக்கது என்றும், இந்தியா, நாகரீகத்தை அடிப்படையாகக் கொண்டு, ஆத்ம வாழ்வை மேற்கொண்ட நாடு என்று கூறினுல் அது சிறந்ததாக இருக்கும் என்றும் அவர் மேலும் கருதினுர்.

# அமெரிக்கக் கோதுமை

## ரூபாயாகவே கொடுத்து இனி இந்தியா வாங்கும்

அமெரிக்காவிடமிருந்து இந்தியா வாங்கக்கூடிய கோதுமைக்கு, இனி டாலர்களாக்த் தரவேண்டியதில்லையென்றும், இந்திய ரூபாயாகவே தரக்கூடுமென்றும் கூறப்படுகிறது.

அமெரிக்க காங்கிரஸ் நிறைவேற்றியுள்ள விவசாய வர்த்தக அபிவிருத்தி உதவிச் சட்டப்படியே இந்த முறை அமுலுக்கு வரக்கூடுமாம்.

அமெரிக்காவிடம் கோதுமை குவிந்து கிடக்கிறது. பல நாடுகளுக்கு அது தேவையாயிருக்கலாம். ஆனுல் தேவைப்படும் கோதுமைக்கு அந்த நாடுகள் அமெரிக்க செலாவணியான டாலராகத் தர இயலவில்லை; எனவே அந்தந்த நாடுகளின் செலாவணியில் கோதுமையை விற்பது, அமெரிக்க கோதுமை விலை போக வழி ஏற்படுத்துவதாகும் என்று கருதியே அமெரிக்கா அச்சட்டத்தை நிறைவேற்றியுள்ளதாம்.

அந்தந்த நாடுகளிடம் பெறுகிற அந்த நாட்டுச் செலாவணியை, அந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்குப் பயன்படுத்த முடியும் என்றும் அமெரிக்கா கருதுவதாகத் தெரிகிறது.

# ஆந்திர சர்க்கரை ஆலையில் வேலை நிறுத்தம்

## 144 தடையை மீறியதாக 150 தொழிலாளர்கள் கைது

கர்னூல், அக். 29—

விசாகபட்டினம் மாவட்டத்திலுள்ள எட்டிகோபகா சர்க்கரை ஆலையில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். சர்க்கார் அங்கே 144 தடை உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

தடை உத்தரவை மீறியதாகவும், ஊர்வலமாகச் செல்ல முயற்சித்ததாகவும், வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டதாகவும் 150 தொழிலாளர்களை போலீசார் கைது செய்துள்ளனர்.

இந்த வேலை நிறுத்தம் அக்டோபர் ஐந்தாம் தேதி முதல் நடைபெறுகிறதாம். சர்க்கரை ஆலைத் தொழிலாளர் கழகத் தலைவர் பத்மனுபராஜு, ஆந்திர கூட்டுறவு இலாகா அமைச்சரைச் சந்தித்து இந்த நிகழ்ச்சியில் தலையிட்டு சமரசம் செய்து வைக்குமாறு கோரியுள்ளார் என்று தெரிகிறது!

ஆந்திர சட்டசபையில் எதிர்க்கட்சித் தலைவரான நாகி ரெட்டி, தடைஉத்தரவை வாபஸ் பெறுமாறு சர்க்காரைக் கோரி வேண்டுகோள் ஒன்று விடுத்திருக்கிறுர்.

# பதவித் துறப்பு நாடகம்!

"நான் பிரதம மந்திரி பதவியிலிருந்தும், காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்தும் விலகிக்கொள்ளப் பிரியப்படுவதாக அண்மையில் குறிப்பிட்டிருந்தது எனது சொந்த விஷயம்; அது, நான் அரசியலிலிருந்தே பூரணமாக விடுதலை பெற்றுக்கொள்கிறேன் என்பதல்ல; நான் தொடர்ந்து அரசியலில் பங்கு கொள்வேன்; கடினமான பிரச்சினைகள் முன்னிற்கும்போது அவைகளை விட்டுவிடமாட்டேன்; எனது நண்பர்களைக் கலந்தாலோசிக்காது எவ்வித இறுதி முடிவுக்கும் வரமாட்டேன்."

என்று பண்டித நேரு அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறுர்.

# எகிப்து முஸ்லிம் உறவு கழகத் தலைவர் கைது!

## சர்க்காருக்கு எதிராக 'புனிதப் போர்' நடத்துகிருராம்!

எகிப்து சர்க்காரினுல் கலைக்கப்பட்ட முஸ்லிம் சகோரத்துவ உறவுக் கழகத்தின் தலைவரான ஹாசன் ஹோதைபி என்பவரை போலீசார் கைது செய்தனர் என்று தெரிகிறது.

சர்க்காருக்கு எதிராக ஹாசன் ஹோதைபி 'புனிதப் போர்' நடத்துவதாக எகிப்து பிரதமர் நாசர் கெய்ரோவில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிய சிறிது நேரத்திற்கெல்லாம், அவர் கைது செய்யப்பட்டிருக்கிறுர்.

# இந்திய அதிகாரிகள் வீடுகளில் பாகிஸ்தான் போலீசார் சோதனை!

## முகமதலியிடம் இந்தியத் தூதுவர் ஆட்சேபம்

### திருட்டு சொத்துக்களைத் தேடியதாக போலீசார் கூற்று

இஸ்லாமாபாதில் உள்ள இந்தியத் தூதுவர் காரியாலய சிப்பந்திகளின் காலனியிலுள்ள வீடுகளில், இன்று காலை பாகிஸ்தான் போலீசார் நுழைந்து சோதனையிட்டனர்; இதனை எதிர்த்து பாகிஸ்தானிலுள்ள இந்தியத் தூதுவர் பாகிஸ்தான் சர்க்காரிடம் ஆட்சேபக் குறிப்பொன்றை தாக்கல் செய்துள்ளார் என்று தெரிகிறது.

காலை ஏழு மணிக்கு மாஜிஸ்திரேட் உள்பட போலீஸ் குழுஒன்று இந்திய அதிகாரிகள் வாழுமிடத்தைச் சோதனையிட்டனர்.

திவாரி என்ற இந்திய அதிகாரியின் வீட்டிலிருந்த துணிமணிகளை சோதனையிட்டு, கடிதங்களையும் பார்வையிட்டனர்.

உதவி இந்தியத் தூதுவர் ஆர். டி. சாரி, 'இவ்வாறு சோதனையிடுவது வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு அளிக்கப்படும் உரிமைகளை மீறும் செயலாகும்,' என்று போலீசாரிடம் கூறினுராம்.

அவர், பிரதமர் முகமதலியைச் சந்தித்து இதுபற்றி கூறினுர் என்றும், இனிமேல் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெருமலிருக்க போலீசாருக்கு உத்திரவிடுவதாக முகமது அலி உறுதியளித்தார் என்றும் தெரிகிறது.

முகமது அலியின் உத்தரவின் பேரில், போலீசார் சோதனையிடுவதை நிறுத்தினுர்கள் என்றும், ஆனுல், திவாரி என்பவரது சில பொருள்களைக் கைப்பற்றிச் சென்றுர்கள் என்றும் தெரிகிறது.

திருட்டுப் போன சாமான்களைத் தேடுவதற்காகவே இந்தச் சோதனை நடைபெற்றது என்று பாகிஸ்தான் போலீசார் காரணம் கூறியுள்ளனர்.

இந்தியத் தூதுவர் தாக்கல் செய்துள்ள ஆட்சேபக் குறிப்பில், இந்த நிகழ்ச்சி, ஒருவருக்கொருவர் அளித்துள்ள அரசியல் உறவுகளை மீறிய செய்கையாகுமென்றும், போலீசாரால் எடுத்துச் செல்லப்பட்ட பொருள்கள் உடனே திருப்பித் தரப்பட வேண்டுமென்று கோரப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

இந்த நிகழ்ச்சி பற்றி இந்திய சர்க்காருக்கு உடனே செய்தி அனுப்பப்பட்டதாம்.

# 4 இத்தாலிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தண்டனை!

## சபையில் கலவரம் விளைவித்ததின் எதிரொலி!

கடந்த உலகப் போருக்குப் பின்னர், இத்தாலியப் பாராளுமன்றம் முதல் தடவையாக இரண்டு உறுப்பினர்களைத் தற்காலிகமாக விலக்கிவைத்தும், இரண்டு பேர்களை கண்டித்துமிருக்கிறது.

பத்து நாட்களுக்கு முன்பு இத்தாலிய பாராளுமன்றத்தில் உறுப்பினர்களிடையே பெருங் கலவரத்தைத் தூண்டி நடத்தினுர்கள் என்று இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

'ஏழு கூட்டங்களுக்கு வரக் கூடாது,' என, இரண்டு கம்யூனிஸ்டு உறுப்பினர்களுக்குத் தண்டனை அளித்ததுடன், இரண்டு உறுப்பினர்களை கீழ் சபை கண்டித்துமிருக்கிறது.

இதுபோன்ற நிகழ்ச்சிகள் இனி நடைபெற்ருல் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கென்று அளிக்கப்பட்டுள்ள உரிமைகளை நீக்கி போலீசார் வசம் அவர்கள் ஒப்படைக்கப்படுவார்கள்என்று இத்தாலியப் பாராளுமன்ற கீழ் சபைத் தலைவர் எச்சரித்திருக்கிறுர்.

கயகோமா என்ற கம்யூனிஸ்டு உறுப்பினர், கிறித்துவ ஜனநாயகக் கட்சி உறுப்பினரான கிளாடியோ மெரீண்டா என்பவர் முகத்தில் காலால்உதைத்ததற்காக 'ஏழு கூட்டங்களுக்கு வரக் கூடாது' என்று தண்டிக்கப்பட்டார்.

வின்வின்சோ மோஸ்கடெலி என்ற கம்யூனிஸ்டு உறுப்பினர் 'மைக்'கை ஆயுதமாகப் பயன்படுத்தியதற்காக அவருக்கும் அதே தண்டனை கொடுக்கப்பட்டது.

கீழ் சபையின் செயலாளர்களில் ஒருவரான ரான்சோ வாகோனி என்ற கம்யூனிஸ்டு உறுப்பினர் தலவரம் ஆரம்பித்த முதற் கூட்டத்தினருடன் இருந்தமைக்காகக் கண்டிக்கப்பட்டார்.

செசாரி பேசோ என்ற உறுப்பினர் ஓர் சாய்வு மேசையின் காலை உடைத்து அதை தடியாகப் பயன்படுத்தியதற்காகக் கண்டிக்கப்பட்டார்.

# தோட்டத் தொழிலாளர் மீது இலங்கை போலீசார் பிரம்படி!

## நூவரேலியாவில் வேலை நிறுத்தம் தொடர்கிறது

### இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் தரும் தகவல்

இலங்கையின் மலைப் பிரதேசமான நூவரேலியா மாவட்டத்தைச் சேர்ந்த தோட்டங்களில் வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்களை போலீசார் பிரம்பினுல் அடித்திருக்கிருர்கள்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் பொதுச் செயலாளர் எஸ். சோமசுந்தரம் இச்செய்தியைத் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர்கள், தோட்டமொன்றில் நடைபெறவிருந்த பொதுக்கூட்டத்திற்கு சென்றுகொண்டிருந்தார்களென்றும், அது சமயம் அவர்களைப் போலீசார் தடுத்து நிறுத்தி, கூட்டம் போடக் கூடாதென்று தடுத்ததாகவும், தலைவர்களும், 100 தொழிலாளர்களும், திரும்பி வருகையில், 'காங்கிரஸ் வாழ்க' என்று கோஷமிட்டனரென்றும், இவர்களைப் போலீசார் பிரம்பினுல் அடித்தார்களென்றும் குறிப்பிட்டுள்ளார்.

சட்டபூர்வமான முறையில் தொழிலாளர்கள் தங்கள் வேலைகளில் ஈடுபடுவதை போலீசார் தலையிட்டுத் தடுக்கின்றனர் என்று அவ்வறிக்கை மேலும் கூறுகிறது.

தொழிலாளர்களைப் பழிவாங்குவதை எதிர்த்தும், வேலையிலிருந்து சில தொழிலாளர்களை நீக்கியதைக் கண்டித்தும், கடந்த இரண்டு வார காலமாக 1000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இப்பகுதியில் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். சரியான முறையில் இப்பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால், மற்ற தோட்டங்களிலுள்ள தொழிலாளர்களும் அனுதாப வேலை நிறுத்தம் செய்வார்கள் என்று கருதப்படுகிறது.

# பிரிட்டன் துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் புதிய சிக்கல்!

## மீண்டும் 3000 பேர் வேலை நிறுத்தம்

## தொழிலாளர் கழக சார்பில்லாதவர்கள் லாரிகளை இயக்குவதற்கு எதிர்ப்பு

**ஒருமாத காலமாக பிரிட்டனில் நடைபெறும் துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் மீண்டும் புதியதோர் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று தெரிகிறது. வேலை நிறுத்தம் முடிவு பெற்றதும் இன்று காலை வேலைக்குத் திரும்பிய தொழிலாளர்களில் 3,000 பேர் மீண்டும் வேலை நிறுத்தம் செய்கிறார்கள்.**

துறைமுகத் தொழிலாளர் கழகத்தினைச் சேராதவர்கள் பலர் துறைமுகத்தில் லாரி, 'வான்'களை ஓட்டி வந்தனர் என்றும், தொழிலாளர் கழகத்தின் அனுமதிச் சீட்டை வைத்திராத நபர்களால் ஓட்டப்படும் லாரிகள், 'வான்'களிலிருந்து சாமான்களை இறக்கவோ, அல்லது அவைகளில் சாமான்களை ஏற்றவோ இயலாது என்றும் தொழிலாளர்கள் மறுத்துவிட்டனராம்.

இச்செய்தி விரைவில் பரவி, சுமார் 3,000 தொழிலாளர்கள் மீண்டும் வேலை நிறுத்தம் செய்கின்றனர் என்று தெரிகிறது.

"இந்த லாரி டிரைவர்கள், வேலை நிறுத்தம் நடைபெற்றபோது தங்களைக் காட்டிக் கொடுத்துவிட்டார்கள்," என்று தொழிலாளர் தரப்பில் கூறப்படுகிறது.

பிரிட்டனில் எட்டு துறைமுகங்களில் 44,000 பேர் வேலை செய்யச் சென்று தேங்கிக் கிடக்கும் பொருள்களை அகற்ற முனைந்தார்கள். ஆனால் இப்போது லண்டன் துறைமுகத்தில் 'குளிர் சேமிப்பு' பகுதியிலும், இந்தப் புதிய வேலை நிறுத்தம் பரவியிருப்பதால், ஆயிரக்கணக்கான டன்கள் இறைச்சி தேங்கிக் கிடக்கிறதாகக் கூறப்படுகிறது.

வேலை நிறுத்தத்தினால் ரூ. 266 கோடி மதிப்புள்ள சாமான்களின் ஏற்றுமதி தடைபட்டதென்றும், 358 கப்பல்கள் பாதிக்கப்பட்டன என்றும் கூறப்படுகிறது.

## புதிய நிலை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியப் பேரரசு ஆராய்ந்து கொண்டு இருக்கிறது எனவும், அவர் அதே கூட்டத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சிறைச்சாலையில் தள்ளப்பட்டுக் கிடந்தவர்களுக்கு விமோசனம் ஏற்பட்டதுபோலவே, பிரெஞ்சிந்திய சர்க்காரால் நாடு கடத்தப்பட்டு இருந்த 35 அரசியல் கட்சியினருக்கும் விமோசனம் கிடைத்திருக்கிறது.

பல பாதைகளின் வழியாக புதுவைக்குள் மேற்படி தலைவர்கள், முகமலர்ச்சியுடன் நுழைந்தனர். அப்படி வந்தவர்களில் குபேர் என்கிற இ. ஜி. பிள்ளையும், முத்து குமரப்ப ரெட்டியாரும், முத்துப் பிள்ளையும் முக்கியமானவர்களாவர்.

கம்யூனிஸ்டு தலைவர்களான வ. சுப்பையா, அண்ணாசாமி, கினி மென்ஷோவும் நகரில் சந்தோஷத்துடன் நுழைந்தனர். நான்கு ஆண்டுகளாக அவர்கள், பிரெஞ்சிந்தியாவிற்குள் காலெடுத்து வைக்க முடியாமல் தவித்துக்கொண்டிருந்தவர்களாவர்.

இவைகள் எல்லாவற்றைக் காட்டிலும் முன்னாள் பிரெஞ்சிந்திய போலீஸ் அதிகாரியான தருதலாவிற்குப் போடப்பட்டிருந்த தடை குறிப்பிடத்தக்கது. அவர் உத்தியோகத்தை விட்டு விலகி, இணைப்புக் காங்கிரசின் செயலாளராக தீவிரமாகப் பாடுபட்டார். அதற்காக, அவரை நாடு கடத்தியதோடு, பலவிதமான குற்றங்களுக்காக அவர், பிரெஞ்சிந்திய சர்க்காரால் தேடப்பட்டும் வந்தார். அவரும் வெற்றி முகத்துடன் புதுவைக்குள் புகுந்தார்!

அதிகார மாற்றம் ஏற்படும் வரையில் இடைக்கால பிரதம கமிஷனராக இருந்தவரும், பிரெஞ்சு இராணுவ போலீஸ் படைத் தலைவரும், அவருடைய மனைவியும், அந்தரங்க காரியதரிசியும், புதுவையைவிட்டு வெளியேறி காய்நாட்டுக்கு விமான மூலம் செல்ல பம்பாய் போயுள்ளனர். அவர்களுடைய அகமும், முகமும் சோகத்தில் ஆழ்ந்திருக்கும் என்பதில் ஆச்சரியமில்லை!

★

## அதிகாரமாற்ற நிகழ்ச்சி

### குதூகலமான விழா

புதுவை, காரைக்கால், ஏனாம், மாகி ஆகிய பகுதிகளின் நிர்வாகப் பொறுப்பை இந்திய அரசாங்கம் பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து ஏற்றுக் கொண்டது.

அதிகார மாற்றத்திற்கான ஒப்பந்தம், பிரெஞ்சு அரசாங்கத்தின் சார்பில் எம். பியரி லாண்டி என்பவராலும், இந்திய அரசாங்கத்தின் சார்பில் முதல் பிரதம கமிஷனர் கேவல் சிங் அவர்களாலும் கையெழுத்திடப்பட்டன.

அதிகார மாற்றத்தை ஒட்டி, சர்க்கார் மாளிகையில் இந்திய மூவர்ணக் கொடி பலத்த ஆரவாரத்திற்கிடையே ஏற்றப்பட்டது.

இந்த வைபவத்தை ஒட்டி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பல்லாயிரவர் திரண்டிருந்தனர். மேடையில் எல்லாக் கட்சியினருக்கும் இடம் அமைக்கப்பட்டிருந்தது.

ஈ. ஜி. பிள்ளை, முத்துக்குமரப்ப ரெட்டியார், முத்து பிள்ளை, வி. சுப்பையா (கம்யூனிஸ்டு) ஆகியோர் மேடையில் அமர்ந்திருந்தனர். இவர்கள் மீதிருந்த 'வாரண்டு'கள் ரத்து செய்யப்பட்ட பின்னர்தான் இவர்கள் புதுவையில் நுழைந்தனர்.

அதிகார மாற்ற விழாவினை வாழ்த்தி குடியரசுத் தலைவர் ராசேந்திரப் பிரசாத், பண்டித நேரு முதலியோரிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

அதிகார மாற்ற ஒப்பந்தத்திற்குப் பிறகு திரு. கேவல் சிங்கிற்கு, பிரெஞ்சு கமிஷனரால், பிரெஞ்சு அதிகாரிகள் எல்லோரும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

விழாவினை யொட்டி, பலவித கேளிக்கைகளும் நகரில் நடைபெற்றன.

## தோழர் ஆசைத்தம்பி இலங்கை பயணம்

திருச்சி, நவ. 2—

இங்கிருந்து நவம்பர் 4-ந் தேதி காலை 11-15 மணிக்கு, 'ஏர் சிலோன்' விமானத்தில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி இலங்கை செல்கிறார்.

இலங்கையில் சுமார் 15 தினங்கள் தங்கி, தி. மு. கழகத்தின் இலட்சியங்கள்பற்றிப் பல கூட்டங்களில் பேசுவார். அதற்குரிய ஏற்பாட்டை இலங்கை தி. மு. கழகத்தின் பொதுச் செயலாளர் தோழர் மணி அவர்களும், பீர்முகம்மது அவர்களும் செய்துவருகின்றனர்.

### சொற் பயிற்சிக் கூட்டம்

3—11—54 மாலை 6 மணிக்கு சென்னை 5-வது வட்ட தி. மு. கழக இல்லில், தோழர் ஈ. கே. பார்த்தசாரதி தலைமையில், 'இயற்கையும் எழிலும்' என்பது பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

## நீத்தார் நினைவு நாள்

**20—10—54** அன்று, தோழர் க. அன்பழகன் அவர்களின் மாமனார் டாக்டர் அ. கிருஷ்ணசாமி(முதலியார்) இயற்கை நிலை எய்தியதை முன்னிட்டு **4—11—54** காலை **8-30** மணி அளவில், சென்னை, புரசை பாக்கம், வேளாளர் தெரு, **10**-எண் இல்லத்தில், நீத்தார் நினைவு நாள் நிகழ்த்தப்படும்.

### மதுரை எஸ். முத்து சுற்றுப்பிரயாணம்

நவ. 4: கோவை மாவட்டம்: மலையாண்டிப்பட்டணம் (கோட்டூர்)
நவ. 5: உடுமலை
நவ. 6: திருப்பூர்
நவ. 7: கோவை
நவ. 8: மதுரை (மாணவ முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டம்)
நவ. 10: சுருளிப்பட்டி (மதுரை மாவட்டம்)

### திருத்தம்

2-11-54(வெளியீடு 3-11-54) 'நம் நாடு' இதழில், தலையங்கப் பகுதியில், 3-ம் பத்தியில், 2-ம் பாராவின் முதல் வரியில் 'அறமோ, மரமோ....' என்று இருப்பதை அன்பர்கள், 'அறமோ, மறமோ....' என்று திருத்தி வாசித்துக்கொள்ளவும்.

(ஆ-ர்.)

# வ. ஆப்பிரிக்க பிரெஞ்சு காலனிகளில் கலவரம்

## 22 பேர் மரணம்; 40 பேருக்குக் காயம்!

## இருபது மில்லியன் 'பிராங்கு' மதிப்புள்ள பொருள்கள் நாசம்

### அல்ஜீரியாவுக்கு பிரெஞ்சு பாரசூட் படைகள் விரைகின்றன!

**அல்ஜீரியா, டுனீஷியா என்ற இரண்டு பிரெஞ்சு காலனிகளிலும் கலவரம் நடைபெற்று 22 பேர் மரணமடைந்தனர் என்று தெரிகிறது.**

**அல்ஜீரியாவில் கலகக்காரர்கள் பிரெஞ்சு சர்க்காரின் போலீஸ் நிலையங்களைத் தாக்கினர்கள் என்றும், இதன் மூலம் 12 பேர் கொல்லப்பட்டு 30 பேர் காயமுற்றனர் என்றும் தெரிகிறது.**

செய்தி கிடைத்ததும், பிரான்சின் பிரதமர் மெண்டே பிரான்ஸ், உள் நாட்டமைச்சர், பாதுகாப்பு இலாக்கா செயலாளர் ஆகியோரின் வேண்டுகோளின் பேரில் அல்ஜீரியாவுக்கு பாரசூட் படையினரில் மூன்று பிரிவினரை அனுப்ப உத்தரவிட்டார். மேற் சொல்லப்பட்ட இருவரும், இப்போது அல்ஜீரியாவில் உள்ளனர்.

நீண்ட காலமாக அமைதியாக இருந்த அல்ஜீரியாவில் இப்போது தேசீய எழுச்சி காரணமாகக் கலகம் விளைவிக்கப்படுகிறது என்று கூறப்படுகிறது.

1952-ல், அல்ஜீரிய தேசீயத் தலைவர் மெசாலி ஹாட்ஜ், பிரெஞ்சு சர்க்காரால் நாடு கடத்தப்பட்டபோது கலவரம் ஏற்பட்டது.

இப்போது நடத்தப்பட்ட தாக்குதல்கள் முன்னேற்பாட்டுடன் நடைபெற்றன என்றும் நடுஇரவில் துவங்கி, இரண்டு மணி வரை போலீஸ் நிலையங்கள், சர்க்கரை ஆலைகள், ரேடியோ நிலையங்கள் தாக்கப்பட்டன என்றும் தெரிகிறது.

பெட்ரோலும், வெடிமருந்தும் கலக்கப்பட்டு அடைக்கப்பட்டிருந்த சிறு சிறு டின்கள் ரேடியோ நிலையத்தின் மீது வீசப்பட்டனவாம்.

இதனால், 20 மில்லியன் பிராங்குகள் நஷ்டம் ஏற்பட்டது என்று தெரிகிறது.

வடக்கு ஆப்பிரிக்காவில் உள்ள மற்றொரு பிரெஞ்சுக் காலனியான டுனீஷியாவில், பிரெஞ்சுப் பாதுகாப்பு படையினர் இருவரை பயங்கரவாதிகள் சுட்டுக் கொன்றனர் என்று தெரிகிறது.

இக்கலவரத்தில் பயங்கரவாதிகளில் எட்டு பேர் கொல்லப்பட்டனர் என்றும், 10 பேர் காயமுற்றனர் என்றும் தெரிகிறது.

பிரான்சின் வடக்காப்பிரிக்க காலனிகளுக்கு சுய ஆட்சி அளிக்கப்படும் என்று பிரெஞ்சுப் பிரதமர் மெண்டே பிரான்ஸ் வானொலியில் பேசிய 24 மணி நேரத்தில் இக்கலவரங்கள் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## கவர்னருக்கு வரவேற்பு

### சேலம் நகரசபையின் முடிவுக்கு பலத்த எதிர்ப்பு

**10 உறுப்பினர்கள் வெளியேறினர்**

சேலம் நகரசபைக் கூட்டம் நகரசபைத் தலைவர் வி. ராமலிங்க முதலியார் தலைமையில் நடைபெற்றபோது, நவம்பர் திங்கள் முதல் நாளன்று நடைபெறவிருக்கும் சென்னை மாநில சமூக ஊழியர் மாநாட்டிற்குத் தலைமை தாங்க வரும் சென்னை கவர்னர் பிரகாசாவுக்கு சேலம் நகரசபையின் சார்பில் ஒரு வரவேற்புப்பத்திரம் ஒன்றை வாசித்தளிப்பது என்ற தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, அதற்கு ஆதரவாக 11 வோட்டுகளும், எதிராக 10 ஓட்டுகளும் கிடைத்தன.

திரு. பி. கே. வரதராஜுலுவும், அவருடன் மற்றுமுள்ள 9 உறுப்பினர்களும் (தீர்மானத்தை எதிர்த்தவர்கள்), மெஜாரிட்டியின் இந்த முடிவை ஆட்சேபிக்கும் முறையில் சபையைவிட்டு வெளியேறியிருக்கின்றார்கள்.

## தலைமை உயர் நீதிமன்றம்

இந்தியாவிலுள்ள சகல நீதிமன்றங்களுக்கும் மேலாக உள்ள தலைமை உயர்நீதிமன்ற(சுப்ரீம் கோர்ட்)த்திற்கான புதிய கட்டிடத்தின் அஸ்திவாரக் கல்லை, இந்திய குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் நாட்டினார்.

இந்தப் புதிய கட்டிடம் கட்டுவதற்குச் சுமார் 55 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாகவும், இது, 1957-க்குள் கட்டி முடிந்துவிடக் கூடும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இந்தக் கட்டிடத்தின் அடித்தள அமைப்பு நீதியின் சின்னத்தைக் காட்டும் தராசைப் போன்றதாகவும், மூன்று மாடிகளைக் கொண்டதாகவும் இருக்கும். நீதிபதிகளுக்காக, அவர்களின் சௌகரியத்துக்கு ஒருவித ஒதுக்கமான நிலைமையும் இருக்க வேண்டி அறைகள் கட்டப்படும். கட்டிடத்தின் அடித்தளத்தில் நீதிமன்றத்திற்குத் தேவையான அஞ்சல் நிலையம், ஸ்டாம்பு விற்பனை செய்யுமிடம் டெலிபோன்கள், புத்தகசாலைகள் முதலியவை இருக்கும். நீதிமன்ற அறைகள், நீதிபதிகளின் அறைகள், நிர்வாக அலுவலகங்கள் யாவும், முதல் மாடியிலேயே அமைந்திருக்கும். இரண்டாவது மாடியில் அட்டர்னி - ஜெனரல் இருப்பார்.

# நில உடைமைத் தகராறு: உழவர்களிடையே அடிதடி

## போலீசார் துப்பாக்கிப் பிரயோகம்; நால்வர் பலி!

ஒரு துண்டு நிலத்தின் உடைமைக்காக கிராமத்திலிருந்த உழவர்களில் இருகோஷ்டியினர் சண்டையிட்டுக் கொண்டனர்; இவர்கள் சண்டையைத் தவிர்க்க, ஆயுதந்தரித்த போலீசார் குறிக்கிட்டிருக்கின்றனர்.

தங்கள் சண்டையில் போலீசார் குறுக்கிடவே, சண்டை பிடிப்பவர்கள் போலீசாருடன் மோத ஆரம்பித்தனராம்.

தங்களைச் சூழ்ந்துகொண்ட கலகக்காரர்களிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ள போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்; அதன் விளைவாக நான்கு பேர்களின் உயிரை துப்பாக்கிக் குண்டுகள் விழுங்கிவிட்டன.

இந்தச சம்பவம் மேற்கு வங்க மாநிலத்தில் முர்ஷிதாபாத் மாவட்டத்தில் உள்ள ராணிநகர் போலீஸ் எல்லைக்குட்பட்ட கிராமமொன்றில் நடைபெற்றிருக்கிறது என்று செய்தி வெளியாகியுள்ளது.

மேலும் தகவல்கள் இல்லாவிடினும் இப்போது கிராமத்தில் அமைதி நிலவுகிறதாம்.

உயர்தர போலீஸ் அதிகாரிகள் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்திருக்கின்றனராம்.

### பெங்களூர்—திருப்பதி பஸ் போக்குவரத்து

பெங்களூருக்கும் - திருப்பதிக்குமிடையே பஸ் போக்குவரத்தை ஆரம்பிப்பதாக மைசூர், ஆந்திர சர்க்கார்கள் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளனவாம். இது பற்றி, சமீபத்தில் சென்னையில் ஒரு மாநாடு நடைபெற்று, போக்குவரத்துக்கான பஸ் கட்டணம் பற்றி விவாதிக்கப்பட்டது. ஆந்திர சர்க்கார் 2 பஸ்களும், மைசூர் சர்க்கார் 2 பஸ்களும் விடலாம் என்றும், இந்தத் திட்டம் கூடிய விரைவில் அங்கீகரிக்கப்பட்டு, வருகிற ஆண்டு ஜனவரி திங்கள் முதல், போக்குவரத்து ஆரம்பிக்கும் என்றும் எதிர்பாக்கப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.